அரசாங்கத்திற்கு மகஜர்கள் போட்டிருக்கிறார்களா? அப்படியானால் அதைத் தடுக்க அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுக்கும் என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : முன்னேறிய சமூகத்தினர் சூழ்ச்சி செய்வது என்பது ஒன்றும் இல்லை. அரசாங்கம் இதைப் பற்றி நன்றாகப் பரிசிலனை செய்து முடிவுக்கு வரும். இதைப் பற்றிப் பரிசிலனை செய்வதற்காக அனுப்பப்பட்டது. ஸ்ரீமான் கோபாலசுவாமி அவர்கள் அதைப் பரிசிலனை செய்து முடிவு தெரிவித்திருக்கிறார்கள். அது இப்போது பரிசிலனையில் இருக்கிறது.

SRI A. A. RASHEED : Is the Hon. Minister aware that scholarships for 1959–60 have not yet been granted? If so, may I know the reasons for delay in granting these scholarships?

THE HON. SRI P. KAKKAN : I think there is no delay. We are urging the Director of Harijan Welfare to give the scholarships in time.

Scholarships to Scheduled Castes and Backward Classes

* 162 *Q*.—SRI N. K. PALANISAMI, SRI S. LAZAR, SRI K. VINAYAKAM : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether this Government have received any communication from the Centre regarding the grant of scholarships to Scheduled Castes and Backward Class communities; and

(*b*) if so, the details of the reply sent to the Centre?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Yes, Sir. The Government of India have decentralized and transferred the work relating to the award of scholarships to Scheduled Castes, Scheduled Tribes and other Backward Classes for post-matriculation studies in India to the State Governments from the current financial year 1959–60.

(*b*) This Government have agreed to the scheme.

SRI N. K. PALANISAMI : ஸார், ஹரிஜன கிறிஸ்தவர்கள் விஷயத்திலும் ஹிந்து ஹரிஜனங்களுக்கு என்னென்ன சலுகைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளை அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்று இந்த சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்டது உண்டா?

THE HON. SRI P. KAKKAN : இந்த சர்க்கார் மத்திய சர்க்காரைக் கேட்கவில்லை.

SRI S. LAZAR : இந்தத் திட்டத்திலே மெரிட்டை அடிப்படையாக வைத்து இந்திய சர்க்கார் ஸ்காலர்ஷிப் அளிக்கிறார்களா? அல்லது ஏழ்மை அடிப்படையில் அளிக்கிறார்களா? இப்போது நமது சர்க்காருக்கு வந்தவுடன் ஏழ்மை அடிப்படையில் அளிக்கப் படுகிறதா?

14th December 1959]

THE HON. SRI P. KAKKAN : நமது மாகாண சர்க்காரைப் பொறுத்த வரையில் மெரிட், ஏழ்மை இரண்டையும் பொருத்துத் தான் இந்த ஸ்காலர்ஷிப் அளிக்கப்படுகிறது. மத்திய சர்க்கார் மார்க்கைப் பார்த்துத்தான் கொடுக்கிருர்கள்.

SRI K. VINAYAKAM : இந்த ஸ்காலர்ஷிப் தரும் விஷயத்தில் காகா சாகேப் கலேல்கர் அவர்கள் தலைமையில் நியமிக்கப்பட்ட அகில இந்திய பாக்வேர்ட் கிளாஸ் கமிஷனின் ரிப்போர்ட் என்ன? அந்தக் கமிஷனுடைய ரிப்போர்ட்டை அரசாங்கம் ஏற்றுக் கொண்டதா? ஏற்றுக்கொள்ளவில்லை யென்ருல் ஏன் ஏற்றுக் கொள்ளவில்லை? அதை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று மத்திய சர்க்காரை இந்த சர்க்கார் வற்புறுத்துமா?

MR. SPEAKER : How is this relevant to this question? The question is 'Has this Government received any communication from the Centre?'. How can he ask about the Kalelkar Commission going into this question and all that? He may put a separate question.

SRI K. VINAYAKAM : Many people do not know that there was a Commission and that there is a report submitted by that Commission.

MR. SPEAKER : I agree that it is a good question. I am not against it. But it does not arise here. He may put a separate question.

SRI M. K. SOMASUNDARAM : ஸார், கிறிஸ்தவ பரவன் கம்யூனிட்டிக்கு இதுவரையில் ஸ்காலர்ஷிப் கொடுக்கவில்லை என்று புகார்கள் வந்துகொண்டிருக்கின்றன. அவர்களையும் பாக்வேர்ட் கிளாஸில் சேர்த்து ஸ்காலர்ஷிப் கொடுக்க அரசாங்கம் முன் வருமா?

THE HON. SRI P. KAKKAN : நான் ஏற்கெனவேயே இந்தச் சபையில் சொல்லியிருக்கிறேன். மதம் மாறிய கிறிஸ்தவ ஹரிஜனங்களுக்கு மத்திய சர்க்கார் கொடுக்கும் சலுகைகள் இல்லை. கல்விச் சலுகை சம்பந்தப்பட்டமட்டில் மதம் மாறிய ஹரிஜனங்களுக்கும் கொடுக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Government buses for long distance routes

* 163 *Q.*—SRI S. LAZAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(*a*) whether there is any proposal before the Government to ply Government buses in any long distance routes; and

(*b*) if so, the names of routes proposed?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) Yes, Sir.

(*b*) The routes have not yet been finalised. I would like to add that the route between Madras and Bangalore has started operation.